# செய்தி அறிக்கை

## ஈராக்கிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் அங்கு வசிக்கும் இலங்கையர்களின் விபரங்களைக் கோருதல்

ஈராக்கின் பல்வேறு பகுதிகளில் பிரதானமாக வடபகுதியில் உள்ள குர்திஸ்தான் பிராந்தியத்தில் ஏறக்குறைய 2000-3000 புலம்பெயர்ந்த இலங்கையர்கள் வசிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலுள்ள ஈராக் தூதரகத்தினால் அறிவிக்கப்படுள்ளதன்படி இந்த எண்ணிக்கையானது அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும் ஈராக்கிற்கு விஜயம் செய்வதற்கு இலங்கைத் தொழிலாளர்களுக்கு வாரந்தோறும் கிட்டத்தட்ட 20 விசாக்கள் வழங்கப்படுவதாகவும் இத் தூதரகம் அறிகின்றது.

எனினும், தூதரகத்தில் 300 புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் பதிவுகள் மாத்திரமே இருக்கின்றது. அந்நாட்டில் நிலவும் பாதுகாப்பு நிலைமையைக் கருதி எமது தூதரகமானது சட்டரீதியான மற்றும் தற்காலிக அடிப்படையிலான வீசா மூலம் ஈராக்கில் தற்போது வசிக்கும் இலங்கையர்களின் விபரங்களைத் திரட்டுவதற்கான நேரடித் தொலைபேசி வசதியொன்றை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஈராக்கில் வாழும் புலம்பெயர்ந்தவர்களின் இலங்கை உறவினர்களிடம் மின்னஞ்சல் மூலம் அல்லது தொலைபேசி மூலம் அங்கு வசிப்பவர்களின் விபரங்களைத் தூதரகத்திற்குத் தெரியப்படுத்துமாறு வேண்டுகின்றோம். அவ்வாறு எமக்குத் தகவல்களை வழங்கமுடியாதவிடத்து, ஈராக்கிலுள்ள உறவினர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்குத் தூதரகத்தின் நடவடிக்கையினைத் தெரிவித்து, அதன் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரியினை வழங்கி கீழே தரப்பட்டுள்ளவாறு விபரங்களை தூதரகத்திற்கு அறியத்தருமாறு கோரப்படுகின்றீர்கள்.

**கோரப்படும் விபரங்கள்:**

பெயர்:

ஈராக்கிலுள்ள தொடர்பு தொலைபேசி இலக்கம்:

மின்னஞ்சல் முகவரி:

ஈராக்கிலுள்ள பணிகொள்வோரின் பெயர்:

தொலைபேசி இலக்கம்:

தொடர்புகொள்ளப்படக்கூடிய இலங்கையிலுள்ள நபர்:

தொலைபேசி இல:

மின்னஞ்சல் முகவரி:

பதில் தூதுவர் /செல்லிடத் தொலைபேசி: 00-964-7704847685
அமைச்சர் ஆலோசகர் /செல்லிடத் தொலைபேசி: 00-964-7703902467
தூதுவராலயம் /செல்லிடத் தொலைபேசி: 00-964-7704224809
மின்னஞ்சல்: slembirq@gmail.com

**இலங்கைத் தூதரகம்**
**பாக்தாத்**
**ஈராக் குடியரசு**
**2014.11.24**